1972 ஆகஸ்ட் 23]

கடிகாரம் எந்தக் கடிகாரம் என்பது போன்று 3, 4 நிமிஷங்கள் சொல்கிறார்கள். அப்படி நேரத்தை வீணாக்காமல் மக்களுக்குப் பயன்படக் கூடிய முக்கியமான செய்திகளை அந்தச் செய்தி நேரத்தில் ஒலிபரப்ப வேண்டுமென்று நம்முடைய அரசாங்கம் கேட்டுக்கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடிகாரம்பற்றி விளம்பரத்திற்காகச் செய்யப்பட்டால் அந்த நேரத்தைக் குறைக்கலாம். ஆனால் கடிகாரம் எப்படிச் செய்வது என்று அறிவியலுக்காகச் சொல்லிக் கொடுக்கப்பட்டால் அந்த நேரத்தைக் குறைப்பது முறையல்ல.

*** 269 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை—திருச்சிராப்பள்ளி வானொலி நிலையங்களின் ஒலி பரப்பும் சக்தியை அதிகப்படுத்த வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு வற்புறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, நெல்லை, கோவை போன்ற வானொலி அஞ்சல் நிலையங்கள் இருந்தாலும், சென்னை, திருச்சி நிலையங்களிலிருந்து ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைத் தொலை தூரங்களில் இருப்பவர்கள் முழுதும் கேட்க முடியவில்லை. மேலும் கடல் கடந்து வாழும் தமிழர்கள் தமிழ்நாட்டில் ஒலிபரப்பப்படும் செய்திகளை நன்கு கேட்க வாய்ப்பளிக்கக் கூடிய முறையில் தமிழகத்திலுள்ள வானொலி நிலையங்களின் சக்தியை அதிகப்படுத்தக் கோரி மத்திய சர்க்காருக்கு நமது அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சென்னை நிலையத்தில் இப்பொழுது 20 கிலோ வாட்ஸ் மீடியம் வேவ் டிரான்ஸ்மிட்டரும், 10 கிலோ வாட்ஸ் ஷார்ட் வேவ் டிரான்ஸ்மிட்டரும் இருக்கின்றன. திருச்சியில் 20 கிலோ வாட்ஸ் மீடியம் வேவ் டிரான்ஸ்மிட்டர் மட்டும் இருக்கின்றது. இதனால் குறைந்தது 100 மைல்களுக்கு அப்பால் அந்தச் செய்திகளைக் கேட்பதாக இருந்தால் தெளிவாகக் கேட்க முடியாமல் சங்கடமான நிலை இருக்கிறது. கல்கத்தா,

[1972 ஆகஸ்ட் 23

பம்பாய் வானொலி நிலையங்களில் இப்பொழுது 50 கிலோ வாட்ஸ் மீடியம் வேவ் டிரான்ஸ்மிட்டர்கள் இயங்கி வருகின்றன. அவைகளைப் போலவே சென்னையிலும் அப்படிப்பட்ட டிரான்ஸ்மிட்டர்களை அமைக்க வேண்டுமென்ற நிலையை வானொலி நிலையத்திற்கு நாம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். வானொலி நிலையப் பொறியியல் அதிகாரிகள் அதைப்பற்றி மத்திய அரசுக்கு அறிவித்ததாகத் தகவல் எதுவும் இல்லை. பொறியியல் அதிகாரிகளின்மூலம் மத்திய அரசுக்குத் தமிழக அரசு அறிவிக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, தென் கோடியிலே இருக்கின்ற கன்னியாகுமரி போன்ற பகுதிகளில் இது போன்ற ஒலிபரப்புச் செய்திகளைக் கேட்பது மிகவும் சங்கடமான நிலையில் இருக்கிறது. ஆகவே மிகவும் வலிமையான டிரான்ஸ்மிட்டிங் ஸ்டேஷனை தென் மாவட்டங்களில், குறிப்பாக திருநெல்வேலியிலோ அல்லது அதன் அருகிலோ நிறுவுவதற்கு வற்புறுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலிலே திருநெல்வேலி நிலையத்தை முழு நேர நிலையமாக ஆக்க வேண்டுமென்ற கருத்திருக்கிறது. அதுபற்றி மத்திய அரசுக்கு எழுதுவோம். அதைப்போல கோவையிலும் முழு நேர நிலையமாக ஆக்க வேண்டுமென்று கருத்து இருக்கிறது. அதற்கும் எழுதுகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் எடுத்துக் கூறியதைப்போல சக்தியை அதிகப்படுத்த வேண்டுமென்பதிலும் இந்த அரசு கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், திருச்சியிலே ஒரு பவர்ஃபுல் டிரான்ஸ்மிட்டர் போடவேண்டுமென்பது மிகமிக அவசியமாகிக் கொண்டு இருக்கிறது. அதற்குக் காரணம் டிரான்சிஸ்டர் வைத்திருப்பவர்கள் மதுரை போன்ற இடங்களில் இருப்பவர்கள் திருச்சியிலிருந்து ஒலிபரப்பாவதைச் சரியாகக் கேட்க முடிவதில்லை. எனவே ஒரு பவர்ஃபுல் டிரான்ஸ்மிட்டரைத் திருச்சியில் சீக்கிரமாக வைப்பதற்கு அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் அப்பொழுதே சொன்னேன். கல்கத்தா, பம்பாய் போன்ற இடங்களில்

1972 ஆகஸ்ட் 23]

சக்திவாய்ந்த டிரான்ஸ்மிட்டர்கள் இருக்கின்றன. அதைப் போல் செய்ய மத்திய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாநில அரசு தெரிவிக்கும்.

திரு. கே. வகாப் : தலைவரவர்களே, சென்னை. திருச்சி போன்ற வானொலி நிலையங்களில் ஒலிபரப்பு செய்யப்படும் தமிழ் நிகழ்ச்சிகளில் இஸ்லாமிய நிகழ்ச்சிகள் மிகவும் குறைந்த அளவில் ஒலிபரப்பப்படுகிறது. அதைப்பற்றி மைனாரிட்டி மக்கள்மீது அக்கறை கொண்டுள்ள இந்த அரசு மத்திய அரசுக்குக் கூறி அந்த நேரத்தை அதிகப்படுத்த ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பற்றிய விவரங்களை வானொலி நிலையத்தினிடத்தில் கேட்டுத் தக்கது செய்ய அரசு முன்வரும்.

ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம்

*270 **வினு—திரு. அ. தேவேந்திரன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

சென்னை நகரில் பொது மைதானங்களில் ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கத்தின் (R.S.S.S.) பயிற்சி வகுப்புகள் நடத்தப் படுவது அரசு அறியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ராஷ்ட்ரீய சுயம் சேவக் சங்கம் சென்னை மாநகரில் தனிப்பட்ட நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் சொந்தமான திடல்களில் உடற்பயிற்சி வகுப்புக்களை நடத்தி வருவதாக அறிவிக்கப்படுகிறது ; பொது இடங்களில் அல்ல.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, காந்தியைச் சுட்டது இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள்தான் என்று சொல்லப்பட்டது. அதைப் போலவே அண்மையில் டெல்லியில் காமராஜரைத் தாக்கியதும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பிரிவினர்தான் என்று சொல்லப்பட்டது. ஆகவே, அந்த மாதிரிக் கலவரங்கள், பிற்போக்கு எண்ணங்களைக் கொண்ட கோஷ்டி என்பதை வற்புறுத்தி மத்திய அரசோடு தொடர்புகொண்டு அதைத் தடை செய்வதற்கு நம்முடைய அரசு சிபார்சு செய்யுமா?